TNVR020027372025

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.
**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,**
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.772/2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>வன்னியம்பட்டி விலக்கு காவல் நிலையம்,<br>குற்ற எண்.114/2025 |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | பெரியசாமி, (29/25)<br>த/பெ.மாடசாமி,<br>5/83 வடக்கு தெரு,<br>குருசாமி புரம்,<br>இனாம்கரிசல்குளம் அஞ்சல்,<br>திருவில்லிபுத்தூர். |
| சம்பவம் நடந்த நாள் | | 17.05.2025 |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 17.05.2025 |
| எதிரி கைதான நாள்<br><br>எதிரி பிணையில் சென்ற நாள் | | 17.05.2025 அன்றே காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 10.03.2026<br><br>இல்லை |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 28.10.2025 |
| குற்றம் | | |



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Act–ன் கீழ் |
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Act–ன் கீழ் |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 20.01.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.2 10.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.3 10.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை |
| எதிரியிடம் BNSS பிரிவு 351(1(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 11.03.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | இல்லை. |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, M.B,.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.P.வடிவேல், B.A., B.L,, |
| எதிரியின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>மேலும் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கானது 17.07.2025ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 11.03.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, M.B,.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.P.வடிவேல், B.A., B.L,, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கு கடந்த 17.05.2025ம் தேதி காலை 09.00 மணிக்கு நூர்சாகிபுரம் செல்வம் என்பவரது காட்டில் வைத்து எதிரி பெரியசாமி எவ்வித அரசு அனுமதியோ உரிமமேயின்றி சட்டவிரோதமான முறையில் சுயலாபம் கருதி சுமார் 5 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக்கேனில் சுமார் 2 லிட்டர் அளவுக்கு புளித்த வாடையுடன் பனங்கள்ளை இறக்கிய குற்றத்திற்காக எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று மம்சாபுரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

2) எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் BNSS பிரிவு 230ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்றார். போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Act–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு, தான் குற்றவாளி இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரணை செய்து, அ.சாஆ.1 மற்றும் அ.சாஆ.2 சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–

4-(1) அ.சா.1 திரு.செல்வநாயகம் தனது சாட்சியத்தில், தான் தற்போது வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 17.05.2025 அன்று காலை 09.00 மணிக்கு தானும், சார்பு ஆய்வாளர் பாலமுருகன் மற்றும் தலைமை காவலர் 313 முருகன் ஆகியோர் சேர்ந்து வன்னியம்பட்டி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சென்றபோது நூர்சாகிபுரம் செல்வம் காட்டு அருகில் பனைமரத்திலிருந்து இறங்கிய நபரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்குப் பின் முரணாக பதில் கூறியவரை மீண்டும் விசாரித்ததில் திருவில்லிபுத்தூர் தாலுகா இனாம் கரிசல்குளம் வடக்குத்தெருவை சேர்ந்த மாடசாமி மகன் பெரியசாமி என்பவர் கையில் 5 லிட்டர் வெள்ளை கலர் கேனில் சுமார் 2 லிட்டர் பனங்கள் வைத்திருந்தார் என்றும், மேற்படி பனங்கள் எதற்கு என விசாரித்தபோது தான் குடிப்பதற்காக பனங்கள் இறக்கினேன் என்று கூறினார் என்றும், அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இறக்கிய குற்றத்திற்காக காலை 09.15 மணிக்கு கைது செய்து அதே இடத்தில்அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் தனிநபர் யாரும் கையெழுத்து செய்ய முன்வராத காரணத்தினால் போலீஸ் பார்ட்டியாகிய தாங்களே கையெழுத்து



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

செய்து, காவல் ஆய்வாளர் அவர்கள் வாய்மொழி உத்தரவின்பேரில் அதே இடத்தில் பனங்கள்ளை ஊற்றி அழித்து, வெள்ளை கேனை உடைத்தும் அதே இடத்தில் போட்டுவிட்டு வந்துவிட்டதாகவும், எதிரி பெரியசாமியை கைது செய்து நிலையம் கொண்டுவந்து, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்ததாகவும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அத்தாட்சி அசாஆ.1 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(2) அ.சா.2 திரு.முருகன் தனது சாட்சியத்தில், தற்போது வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 17.05.2025 அன்று காலை 09.00 மணிக்கு தானும், சார்பு ஆய்வாளர் பாலமுருகன் மற்றும் தலைமை காவலர் செல்வநாயகம் ஆகியோர் சேர்ந்து வன்னியம்பட்டி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சென்றபோது நூர்சாகிபுரம் செல்வம் காட்டு அருகில் பனைமரத்திலிருந்து இறங்கிய நபரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்குப் பின் முரணாக பதில் கூறியவரை மீண்டும் விசாரித்ததில் திருவில்லிபுத்தூர் தாலுகா இனாம் கரிசல்குளம் வடக்குத்தெருவை சேர்ந்த மாடசாமி மகன் பெரியசாமி என்பவர் கையில் 5 லிட்டர் வெள்ளை கலர் கேனில் சுமார் 2 லிட்டர் பனங்கள் வைத்திருந்தார் என்றும், மேற்படி பனங்கள் எதற்கு என விசாரித்தபோது தான் குடிப்பதற்காக பனங்கள் இறக்கினேன் என்று கூறினார் என்றும், அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் இறக்கிய குற்றத்திற்காக காலை 09.15 மணிக்கு கைது செய்து அதே இடத்தில் அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் தனிநபர் யாரும் கையெழுத்து செய்ய முன்வராத காரணத்தினால் போலீஸ் பார்ட்டியாகிய தாங்களே கையெழுத்து செய்ததாகவும், காவல் ஆய்வாளர் அவர்கள் வாய்மொழி உத்தரவின்பேரில் அதே இடத்தில் பனங்கள்ளை ஊற்றி அழித்ததாகவும், வெள்ளை கேனை உடைத்தும் அதே இடத்தில் போட்டுவிட்டு வந்துவிட்டதாகவும், எதிரி பெரியசாமியை கைது செய்து நிலையம் கொண்டுவந்து, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்ததாகவும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார்



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

என்றும், தன்னிடம் காட்டப்படும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியிலுள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(3) அ.சா.3 திரு.பாலமுருகன் தனது சாட்சியத்தில், தற்போது வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 17.05.2025 அன்று காலை 09.00 மணிக்கு வன்னியம்பட்டி சார்பு ஆய்வாளராகிய தான் மற்றும் தன்னுடன் தலைமை காவலர் 642 செல்வநாயகம், தலைமை காவலர் 313 முருகன் ஆகியோர்களுடன் மது விலக்கு சம்மந்தமாக ரோந்து சுற்றி நூர்சாகிபுரம் செல்வம் என்பவர் காட்டின் அருகே வந்தபோது பனை மரத்திலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்த நபரை விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியவரை மேலும் விசாரித்ததில் திருவில்லிபுத்தூர் தாலுகா இனாம்கரிசல்குளம் வடக்கு தெருவை சேர்ந்த மாடசாமி மகன் பெரியசாமி வயது 29/2025 என்பவரை விசாரிக்க கையில் வைத்திருந்த 5 லிட்டர் வெள்ளை நிற கேனில் சுமார் 2 லிட்டர் அளவுள்ள புளித்த வாடையுடன் கூடிய பனங்கள்ளை விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறினார் என்றும், அரசால் தடை செய்யப்பட்ட மதுபானங்களை சுயலாபம் கருதி விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக 09.15 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்து கையில் வைத்திருந்த பனங்கள்ளை கைப்பற்றி அழிக்க காவல் ஆய்வாளர் திரு.முத்துக்குமார் அவர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் அந்த இடத்தில் கீழே கொட்டி வெள்ளை கேனை உடைத்தும் அத்தாட்சியில் தனிநபர் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் தன்னுடன் வந்த காவலர்களே அத்தாட்சியில் சாட்சிகளாக கையெழுத்து செய்தார்கள் என்றும், 10.00 மணிக்கு அத்தாட்சியுடன் எதிரியை வன்னியம்பட்டி காவல்நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 என்றும், பின்னர் மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து எதிரி மீது கடந்த 17.05.2025 அன்று பிரிவு.4(1)(C) TNP Act ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரி சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார். இவ்வழக்கில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) தீர்வுக்குரிய பிரச்சனை :–

அரசு தரப்பால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) கடந்த 17.05.2025 ம் தேதி காலை 09.00 மணிக்கு நூர்சாகிபுரம் செல்வம் என்பவரது காட்டில் வைத்து எதிரி பெரியசாமி எவ்வித அரசு அனுமதியோ உரிமமேயின்றி சட்டவிரோதமான முறையில் சுயலாபம் கருதி சுமார் 5 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளை நிற பிளாஸ்டிக்கேனில் சுமார் 2 லிட்டர் அளவுக்கு புளித்த வாடையுடன் பனங்கள்ளை இறக்கினார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், பொதுவாக பதநீர் நேரம் கடந்தால் பனங்கள்ளாக மாறிவிடும் என்றும், இவ்வழக்கில் சம்பவம் இடம் தொடர்பான பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கில் ஒரே காவல் அதிகாரி தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இவ்வழக்கு விசாரணையையும் மேற்கொண்டதாகவும், இவ்வழக்கு சொத்தை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் பிரிவு 32(C)–ன் கீழ் கொடுக்கப்பட்ட வகையங்களின் படி அழிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கானது புள்ளி விபரத்திற்காக எதிரி மீது போடப்பட்டுள்ளதாகவும், அதனால் இவ்வழக்கின் சாட்சிகள்



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

10. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 17.05.2025 அன்று காலை 09.00 மணிக்கு தானும் தலைமை காவலர் முருகன் மற்றும் சார்பு ஆய்வாளர் பாலமுருகன் ஆகியோர் சேர்ந்து மதுவிலக்கு சம்பந்தமாக தங்கள் காவல் நிலைய எல்லைக் குட்பட்ட பகுதியில் இருந்து மேற்கொண்ட போது நூர்சாகிபுரம் செல்வம் காட்டிற்கு அருகில் வைத்து பனை மரத்திலிருந்து இறங்கிய நபரை பிடித்து விசாரித்தபோது அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியவரை மீண்டும் விசாரித்தபோது, அவரது பெயர் மாடசாமி மகன் பெரியசாமி என்பது தெரிய வந்ததாகவும் அவர் கையில் வைத்திருந்த 5 லிட்டர் வெள்ளை கேனில் சுமார் 2 லிட்டர் பனங்கள் இருந்ததாகவும் குடிப்பதற்காக வைத்திருப்பதாக அவர் கூறியதாகவும், அது அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் என்பதால் எதிரியை கைது செய்து அதே இடத்தில் அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் தனிநபர் யாரும் கையெழுத்து செய்ய முன் வராததால் போலீஸ் பார்ட்டிகள் ஆகிய தாங்களே கையெழுத்து செய்ததாகவும், காவல் ஆய்வாளர் வாய்மொழி உத்தரவின் பேரில் அதே இடத்தில பனங்களை ஊற்றி அழித்ததாகவும் வெள்ளை கேனை உடைத்தும் அதே இடத்தில போட்டு விட்டு வந்து விட்டதாகவும் எதிரி பெரியசாமியை கைது செய்து நிலையம் கொண்டுவந்ததாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடைய தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், மேற்படி செல்வம் என்பவரது காடானது நூர்சாகிபுரத்தில் உள்ள ஒரு பழமையான பாலடைந்த கல்லூரி அருகே உள்ளதாகவும், அந்த இடத்தில் அதிகமாக பனை மரங்கள் உள்ளதாகவும் அதில் எந்த மரத்திலிருந்து எதிரி பனங்கள் இறக்கினார் என்பது பற்றி தனக்கு தெரியும் என்றும், ஆனால் தனது வாக்குமூலத்தில் எந்த மரம் என்று குறிப்பிட்டு



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

கூறவில்லை என்றும், எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக கூறப்படும் பனங்கள்ளை ஆய்விற்கு அனுப்புவதற்காக மாதிரிகள் எதுவும் எடுக்கவில்லை என்றும், அத்தாட்சியிலும் எதிரியிடம் கையெழுத்து பெறவில்லை என்றும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், அத்தாட்சியில் காவல் ஆய்வாளரின் உத்தரவின் பேரில் பனங்கள்ளை அழித்ததாக குறிப்பிடப்பட்டுள் ளதாகவும், ஆனால் ஆய்வாளரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும், மேற்படி பனங்கள்ளின் மாதிரிகள் எடுக்கப்படவில்லை என்றும், எதிரி குடிப்பதற்காகவும் விற்பனை செய்வதற்காகவும் பனங்களை வைத்திருந்ததாகவும், மேற்படி பனங்கள்ளானது விஷத்தன்மை உடையது இல்லை என்பதால், மாதிரிகள் எடுத்து ஆய்வுக்கு அனுப்பப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 17.05.2025 அன்று காலை 09.00 மணிக்கு தானும் அ.சா.1 மற்றும் சார்பு ஆய்வாளர் பாலமுருகன் ஆகியோர் சேர்ந்து மதுவிலக்கு சம்பந்தமாக தங்கள் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் இருந்து மேற்கொண்ட போது நூர்சாகிபுரம் செல்வம் காட்டிற்கு அருகில் வைத்து பனை மரத்திலிருந்து இறங்கிய நபரை பிடித்து விசாரித்தபோது அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியவரை மீண்டும் விசாரித்தபோது அவரது பெயர் மாடசாமி மகன் பெரியசாமி என்பது தெரிய வந்ததாகவும், அவர் கையில் வைத்திருந்த 5 லிட்டர் வெள்ளை கேனில் சுமார் 2 லிட்டர் பனங்கள் இருந்ததாகவும், குடிப்பதற்காக வைத்திருப்பதாக அவர் கூறியதாகவும், அது அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் என்பதால் எதிரியை கைது செய்து அதே இடத்தில் அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் தனிநபர் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால் போலீஸ் பார்ட்டிகள் ஆகிய தாங்களே கையெழுத்து செய்ததாகவும், காவல் ஆய்வாளர் வாய்மொழி உத்தரவின் பேரில் அதே இடத்தில பனங்களை ஊற்றி அழித்ததாகவும் வெள்ளை கேனை உடைத்தும் அதே இடத்தில போட்டு விட்டு வந்துவிட்டதாகவும், எதிரி பெரியசாமியை கைது செய்து நிலையம் கொண்டுவந்ததாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும்



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடைய தான் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், மேற்படி செல்வம் என்பவரது காடானது நூர்சாகிபுரத்தில் உள்ள ஒரு பழைமையான பாலடைந்த கல்லூரி அருகே உள்ளதாகவும், அந்த இடத்தில் அதிகமாக பனை மரங்கள் உள்ளதாகவும், அதில் எந்த மரத்திலிருந்து எதிரி பனங்கள் இறக்கினார் என்பது பற்றி தனக்கு தெரியும் என்றும் ஆனால் தனது வாக்குமூலத்தில் எந்த மரம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றும் எதிரியை சோதனை செய்வதற்கு முன் சோதனை சம்பந்த கடிதம் பெறப்படவில்லை என்றும், எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக கூறப்படும் பனங்கள்ளை ஆய்விற்கு அனுப்புவதற்காக மாதிரிகள் எதுவும் எடுக்கவில்லை என்றும், அத்தாட்சியிலும் எதிரியிடம் கையெழுத்து பெறவில்லை என்றும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், அத்தாட்சியில் காவல் ஆய்வாளரின் உத்தரவின் பேரில் பனங்கள்ளை அழித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் ஆய்வாளரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும், மேற்படி பனங்கள்ளின் மாதிரிகள் எடுக்கப்படவில்லை என்றும், எதிரி குடிப்பதற்காகவும் விற்பனை செய்வதற்காகவும் பனங்களை வைத்திருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 17.05.2025 அன்று தான் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் சேர்ந்து மதுவிலக்கு சம்பந்தமாக தங்கள் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் இருந்து மேற்கொண்ட போது நூர்சாகிபுரம் செல்வம் காட்டிற்கு அருகில் வந்தபோது பனை மரத்திலிருந்து இறங்கிய நபரை பிடித்து விசாரித்தபோது, அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியவரை மேலும் விசாரித்தபோது அவரது பெயர் மாடசாமி மகன் பெரியசாமி என்பது தெரிய வந்ததாகவும், அவர் கையில் வைத்திருந்த 5 லிட்டர் வெள்ளை கேனில் சுமார் 2 லிட்டர் பனங்கள் விற்பனைக்காக வைத்திருப்பதாக அவர் கூறியதாகவும், அது அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள் என்பதால் எதிரியை கைது செய்து காவல் ஆய்வாளர் திரு.



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

முத்துக்குமார் அவர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் அதே இடத்தில பனங்களை கொட்டி வெள்ளை கேனை உடைத்தும், அத்தாட்சியில் தனிநபர் யாரும் கையெழுத்து செய்ய முன்வராததால், தன்னுடன் வந்த காவலர்களை சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், எதிரியை அத்தாட்சியுடன் வன்னியம்பட்டி காவல் நிலையம் அழைத்து வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்னர் எதிர் மீது கடந்த 17.05.2019 அன்று பிரிவு 4(1) C TNP ACT ன் கீழ் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. மேலும் தனது குறுக்கு விசாரணையில், இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பாக மேற்படி செல்வம் காடானது எங்கு அமைந்துள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றும், செல்வம் காடு என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள் ளதாகவும் எதிரி பனை மரத்திலிருந்து இறங்கிய போது அவரிடம் இருந்து அருவாள், மற்றும் பனைமரம் ஏற பயன்படுத்தும் கருவிகள் கைப்பற்றப்படவில்லை என்றும், அவர் மரத்திலிருந்து இறங்கும்போது வெள்ளை நிற கேன் மட்டும் தான் வைத்திருந்ததாகவும், அரிவாள் மற்றும் கருவிகள் இல்லை என்றும், மேற்படி எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பனங்களில் விஷ வாடையுடன் இல்லாமல் புளித்த வாடையுடன் இருந்ததால், அதன் மாதிரிகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும், பனங்களின் விஷவாடை மற்றும புளித்த வாடயை கண்டுபிடிப்பதற்கு சிறப்பாக தான் எதுவும் பயிற்சிகள் எடுக்கவில்லை என்றும், இதற்கு முன் பார்த்த வழக்குகள் மூலம் தெரிந்து கொண்டதாகும். மேற்படி செல்வம் காட்டில் 100 பனை மரங்கள் இருக்கும் என்றும், அதில் எந்த பனை மரத்திலிருந்து எதிரி குறிப்பாக இறங்கினார் என்று குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட வில்லை என்றும், இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும், எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், எதிரியை சோதனை செய்யவில்லை என்றும், அவர் கையில் வைத்திருந்த கேனை மட்டும் கைப்பற்றியதாகவும், மேற்படி பனங்கள் ஆனது எளிதில் கெட்டுப் போகக்கூடிய பொருள் என்பதால் சம்பவ இடத்திலேயே



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

அழித்து விட்டதாகவும், மேற்படி பனங்கள்ளை கொட்டி அழித்த போதும் குடத்தை உடைத்த போதும் புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றும், மேற்படி திரவமானது பனங்கள் தான் என்று மாதிரிகள் எடுத்து நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்றும், பதநீரானது நேரம் கடந்து விட்டால் புளித்தவாடை அடிக்கும் என்றும், முதல் தகவல் அறிக்கையில் செல்வம் காட்டிற்கு அருகே என்று குறிப்பிடப்பட்டுள் ளதாகவும் குற்ற இறுதி அறிக்கையில் செல்வம் காட்டில் வைத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

15. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து இவ்வழக்கின் சாட்சிகளே எதிரி குறிப்பாக எந்த மரத்தில் இருந்து பனங்கள் இறக்கினார் என்று இவ்வழக்கு ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றும், கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பனங்கள்ளை ஆய்விற்கு அனுப்பவில்லை என்றும், அத்தாட்சியிலும் எதிரியிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், அத்தாட்சியில் எந்த காவல் ஆய்வாளரின் உத்தரவின் பெயரில் மேற்படி கைப்பற்றப்பட்ட பனங்கள்ளை அழித்ததாக அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 தனது சாட்சியத்தில் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும், திரவத்தில் விஷவாடை அடிக்கவில்லை என்றும், புளித்த வாடை மட்டும் இருந்ததாகவும், பதநீரானது நேரம் கடந்து விட்டால் புளித்த வாடை அடிக்கும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அதிலிருந்து உண்மையில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் திரவமானது பனங்கள் தானா என்பது குறித்த நியாயமான சந்தேகத்தை நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

16. மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியை முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடமானது செல்வம் காட்டின் அருகே என்றும், குற்ற இறுதி அறிக்கையில் செல்வம் காட்டில் வைத்து என்றும் குறிப்பிட்டுள்ளதாக ஒப்புக்



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

கொண்டுள்ளார். பொதுவாக குற்றவியல் வழக்குகளில் குற்றம் நடந்த இடத்தை விசாரணை அதிகாரி பார்வையிட்டு அங்குள்ள சூழ்நிலைகளையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் ஆவணப்படுத்துவது புலன் விசாரணை அதிகாரியின் அடிப்படை கடமையாகும். அதுமட்டுமின்றி பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஆகியவை சம்பவயிடத்தை பற்றிய முக்கியமான பதிவாகும். மேலும் மற்ற சாட்சிகளின் சாட்சியங்களை உறுதிப்படுத்தவும் அவை முக்கியமான ஆவணங்களாக விளங்குகிறது. ஆனால் இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படாதது, இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் குறித்த நியாயமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

17. மேலும் இவ்வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை, போலீஸ் பார்ட்டிகளே அத்தாட்சியில் கையெழுத்து செய்துள்ளனர். மேலும் அத்தாட்சியில் எதிரியிடமும் கையெழுத்து பெறப்படவில்லை. இவ்வழக்கின் சம்பவம் நடந்த 17.05.2025 அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 27.05.2025 அன்று தான் நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனால் அதற்கு முன்பே எதிரி மீது கடந்த 17.05.2025 அன்றே குற்ற இறுதியறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சிகள் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதை கருத்திற்கொண்டு புலன் விசாரணையிலுள்ள குறைபாடுகளை கருத்திற்கொண்டும், வழக்கின் முக்கிய ஆவணங்களான பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்றவற்றை தயார் செய்யப்படாததை கருத்திற் கொண்டும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பணங்கள்ளை மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்விற்கு அனுப்ப தவறியதை கருத்தில் கொண்டும், மேலே விவரிக்கப்பட்ட காரணங்களை கருத்திற்கொண்டும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

18. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4(1)(C) TNP (Amendment)Act 2024 –ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

19. மேலும் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1 திரு.செல்வநாயகம் (தலைமை காவலர்)

அ.சா.2 திரு.முருகன் (தலைமை காவலர்)

அ.சா.3 திரு.பாலமுருகன் (சார்பு ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

அசாஆ.1 அத்தாட்சி

அ.சாஆ.2 முதல் தகவல் அறிக்கை

**அரசு தரப்பு சான்றுப் பொருள்** – இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |

SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 772/2025

TTNVR020027372025

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>வன்னியம்பட்டி விலக்கு காவல் நிலையம்,<br>குற்ற எண்.114/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | பெரியசாமி |